பின்னிணைப்பு 2

# வழியனுமதி மற்றும் மரங்களை வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளைத் தறித்தலுக்கான வழிகாட்டல்கள்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள்ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது

மூன்றாம் பதிப்பு

குறிப்பு இல: PUC/E/RA/GUI/01

திகதி: 17 ஐப்பசி 2013

---

இவ் வழிகாட்டல்களானது 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச சட்டத்திற்கு (2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டது). அமைவாகவும், திகதி 17, ஐப்பசி 2013 அன்று ஆணைக்குழுவின் அனுமதிக்கமைவாகவும் தயாரிக்கப்பட்டது. உரிமம் பெற்ற தரப்பினர் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் தங்களுக்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்றும் போது இவ் வழிகாட்டல்களை பின்பற்றல் வேண்டும். இது தொடர்பாக ஆணைக்கழுவினால் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனைத்து வழிகாட்டல்களும் இதனால் பதிலீடு செய்யப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்


வரைவிலக்கணங்கள்……………………………………………………………………01

பாகம் 1 – அறிமுகம்…………………………………………………………………...03

பாகம் 2 – வழியனுமதிக்கான வழிகாட்டிகள்………………………………………......06

பாகம் 3 – மரங்களை தறித்தல் அல்லது அதன் கிளைகளை வெட்டுகதற்கான வழிகாட்டல்கள்……………………………………………………….…..11

பாகம் 4 – காணிகளுக்குள் அல்லது வளவினுள் பிரவேசித்தல்……………………...13

பாகம் 5 – பொது மக்களுக்கான தகவல்கள…………………………………………15

பாகம் 6 – பொதுவானவை………………………………………………………..18

இணைப்பு I – வழியனுமதியை கோரும் அறிவித்தல்……………………………………20

இணைப்பு I – இற்கான பின்னிணைப்பு – வழியனுமதி வழங்கல்…………………………...21

இணைப்பு II – வழியனுமதி உடன்படிக்கை………………………………………………22

இணைப்பு III – ஒரு மின்சார மார்க்கத்தினைநிறுவுவதற்கான/நிறுவிவைத்திருப்பதற்கானஅதிகாரத்தைக் கோருகின்ற விண்ணப்பம்………………………………………………….24

இணைப்பு IV – வழியனுமதியை சுவீகரிப்பதற்கான சிபாரிசு……………………….………26

இணைப்பு IV – இற்கான பின்னிணைப்பு………………………….….……………………27

இணைப்பு V – மரத்தை வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளை தறித்தல் தொடர்பான அறிவித்தல்………….……………………………………………28

இணைப்பு VI – மரத்தை(ங்களை) வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளை தறித்தல் தொடர்பான கோரிக்கை…………………………….…………………30

இணைப்பு VII – ஒரு காணியினுள் அல்லது வளவினுள் உத்தேசிக்கப்பட்ட நுழைவு தொடர்பில் விடுக்கப்படும் அறிவித்தல்…………………………...……..32

## வரைவிலக்கணங்கள்

**"வாழிடம்"** என்பது, ஒரு தனியார் வாழிடமாக இருப்பாட்சி செய்யப்படும் அல்லது (இருப்பாட்சி செய்யப்படாதிருப்பின்) கடைசியாக இருப்பாட்சி செய்யப்பட்ட அல்லது இருப்பாட்சி செய்யப்படுவதற்கு முன்னப்படும் ஒரு கட்டிடம் அல்லது கட்டத்தின் பாகம் ஆகும்.

**"விநியோகித்தல்"** என்பது, மின்சாரம் தொடர்பான தாழ்ந்த வோற்றளவு மின் வழிகளையும் மின்பொறித் தொகுதியையும் (முழுமையாக அல்லது பிரதானமாகக்) கொண்டுள்ளதும், எவையேனும் வளவுகளுக்கு அல்லது வேறேதேனும் விநியொக முறைமைக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றதுமான ஒரு முறைமை ஆகும்.

**"மின் மார்க்கம்"** என்பது, ஏதேனும் நோக்கத்திற்காக மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நிலத்தின் கீழ் அல்லது நிலத்திற்கு மேலான ஏதேனும் மின் மார்க்கம் ஆகும். மேலும், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலாழிய பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:

(அ) அத்தகைய ஏதேனும் வழி எந்தக் கட்டமைப்பில், கம்பத்தில் அல்லது வேறு பொருளில் அல்லது அதன் மீது, அதன் மூலம் அல்லது அதிலிருந்து ஆதாரப்படுத்தப்படுகின்றதோ, கொண்டு செல்லப்படுகின்றதோ அல்லது தொங்கவிடப்படுகின்றதோ அல்லது ஆதாரப்படுத்தப்படக்கூடுமோ, கொண்டு செல்லப்படக்கூடுமோ அக்கட்டமைப்பு, கம்பம் அல்லது வேறுபொருள் உட்பட ஆனால், அதற்கு வரையறுக்கப்படாமல், அத்தகைய ஏதேனும் வழிக்கான ஏதேனும் ஆதாரம்:

(ஆ) மின்சாரத்தைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காக அத்தகைய ஏதேனும் வழியுடன்.இணைக்கப்படும் ஏதேனும் உபகரணம்: அத்துடன்

(இ) அத்தகைய ஏதேனும் வழியைச் சுற்றியுள்ள அல்லது ஆதாரப்படுத்துகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் வழியினால் சுற்றியுள்ளதாகவுள்ள அல்லது ஆதாரப்படுத்தப்பட்டதாகவுள்ள அல்லது அத்தகைய ஏதேனும் வழிக்கு மிக்க அண்மையில் நிறுவப்படுகின்ற, அல்லது அத்தகைய ஏதேனும் வழியுடன் இணைந்ததாக ஆதாரப்படுத்தப்படுகின்ற, கொண்டுசெல்லப்படுகின்ற அல்லது தொங்கவிடப்படுகின்ற (அதன் உறை, காவலி அல்லது மேற்பூச்சு உட்டபட்ட) ஏதேனும் கம்பி, வடம், குழல், குழாய் அல்லது இவற்றையொத்த வேறு பொருள்.

**"மின் பொறித்தொகுதி"** என்பது, பின்வருவனவற்றைத் தவிர, மின்சாரத்தைப் பிறப்பாக்க, கடத்த, விநியோகிக்க அல்லது வழங்க அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் ஏதேனும்

பொறித் தொகுதி, சாதனம், உபகரணம் அல்லது துணைக்கருவி ஆகும்.

(அ) மின்வழியொன்று:

(ஆ) எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்படும் மின்வாரத்தின் அளவை நிச்சயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற மானியொன்று: அல்லது

(இ) பாவனையாளரொருவரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மின் துணைக்கருவியொன்று:

**"மின்சாரச் சட்டம்"** என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம் (2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டது).

**"உரிமம் பெற்ற தரப்பு"** என்பது, மின் பிறப்பாக்கல், கடத்துகை அல்லது விநியோகித்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு உரிமமொன்று அளிக்கப்பட்டுள்ள தரப்பு ஆகும்.

**"வளவுகள்"** என்பது, எதேனும் காணியை, கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை உள்ளடக்கும்:

**"வழங்குதல்"** என்பது, மிக்சாரம் தொடர்பாக, (உரிமம் பெற்ற தரப்பு அதன் உரிமத்தினால் எந்தச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் செயற்காடுகளைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக அதனால் இருப்பாட்சி செய்யப்படும் வளவுகள் அல்லாத) எவையேனும் வளவுகளக்கு மின்சாரம் வழங்குதல் ஆகும். ஆனால் மின்சாரத்தின் தொகையளவிலான விற்பனைகளை உள்ளடக்காதிருத்தல் வேண்டும்:

**"கடத்துதல்"** என்பது, மின்சாரம் தொடர்பாக, (முழுமையாக அல்லது பிரதானமாக) உயர் உவோற்றளவு வழிகளையும் மின் பொறித் தொகுதியையம் கொண்டுள்ளதும், பிறப்பாக்க நிலையமொன்றிலிருந்து உபநிலையமொன்றுக்கும், ஒரு பிறப்பாக்க நிலையத்திலிருந்து இன்னொன்றுக்கு அல்லது ஓர் உபநிலையத்திலிருந்து இன்னொன்றுக்கும் மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றதுமான ஒரு முறைமை மூலம் மின்சாரத்தினை இடம் பெயர்த்தல் ஆகும்.

**"வழியனுமதி"** என்பது, காணியின்மீது அல்லது காணியின் மேல் அல்லது காணியின்கீழ் மின்வழியை உரிமம் பெற்றத் தரப்பினர் நிறுவுவதற்கும் நிறுவிவைத்திருப்பதற்கம் அத்துடன் மின்வழியைச் சோதனையிடும், பேணும், செம்மையாக்கம், திருத்தும், மற்றும், மாற்றீடு செய்யும் அல்லது அகற்றும் நோக்கத்திற்காக காணியை அணுகுவதற்குமான சம்மதம் ஆகும்.

# பாகம் 1 – அறிமுகம்

1.1 இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு. 2002 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட,(இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" என குறிப்பீடு செய்யப்படும்) மின்சாரக் கைத்தொழிலின் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழிநுட்பம் சார்ந்த ஒழுங்கப்படுத்துனர்ஆகும். 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்திற்கும், 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க மின்சாரச்(திருத்தச்)சட்டத்திற்கு(இதனகத்துப்பின்னர் "மின்சாரச் சட்டம்" என குறிப்பீடு செய்யப்படும்) அமைவாக, ஆணைக்குழுவானது: இலங்கை முழுவதும், எப்போதும் வினைத்திறன் வாய்ந்ததும் மற்றும் சிக்கனமான மின் வழங்கல் மற்றும் பராமரிப்பினை உறுதி செய்யக் கடமைப்பட்டுள்ளது.

1.2 வழங்கப்பட்ட உரிமத்தில் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பில், காணியின்மிது அல்லது காணியின்மேல் அல்லது காணியின்கீழ் மின்வழியை உரிமம் பெற்ற தரப்பு நிறுவுவதற்கும் நிறுவிவைத்திருப்பதற்கும் அத்துடன் மின்வழிறைச் சோதனையிடும், பேணும், செம்மையாக்கம், திருத்தும், மற்றும், மாற்றீடு செய்யும் அல்லது அகற்றும் நோக்கத்திற்காக காணியை அணுகுவதற்குமான சம்மதம் ஆகும். மின்வழியை உரிமம் பெற்ற தரப்பு நிறுவுவதற்கும் நிறுவிவைத்திருப்பதற்கும மற்றும் மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக வளவினுள் பிரவேசிப்பதற்கு, வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து அனுமதியினை பெறல் வேண்டும். மின்சாரச் சட்டத்தின், I ஆம் அட்டவணையின் 3 மற்றும் 5 ஆம் விடயங்களில் உரிமம் பெற்ற தரப்பு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன: வளவின் உரிமையாளர் அல்லத குயிருப்பாளரிடம் அவ்வாறு பெறவேண்டிய அனுமதி, மற்றும் (அனுமதி பெறமுடியாத சந்தர்ப்பத்தில்) மேற்குறிப்பிட்டதற்கு அதிகாரம் பெறுவதற்கான விண்ணப்பித்தல் என்பனவாகும்.

1.3 மின்சாரச் சட்டத்தின் I ஆம் அட்டவணையின் 4 ஆம் விடயத்தின் நட்டஈடு செலுத்துதல் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. காணியின் சொந்தக்காரர் வழியனுமதியினை அளிக்கும் போது மற்றும் அத்தகையதொரு வழியனுமதி அளிக்கப்படும் போது ஏதேனும் உரிமை பிரயோகிக்கையில் எவருக்கும், சேதம் அல்லது தொந்தரவு ஏற்படுதல் தொடர்பானதாகம்.

1.4 உரிமம் பெறுனரினால் நிறுவப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது நிறுவப்படவுள்ள மின் மார்க்கம் அல்லது மின் பொறித் தொகுதிக்கு அண்மையில் அல்லது கிட்டியஅ ண்மையில் மரமொன்று உள்ளவிடத்து அதனை வெட்டி வீழ்த்தும் படி அல்லது அதன் கிளைகளைத் தறித்தல் அல்லது அதன் வேர்களை வெட்டி விட தேவை ஏற்படலாம். அவை,

(அ) மின் மார்க்கத்தின் அல்லது பொறித் தொகுதியின் நிறுவுகை, பேணுகை அல்லது தொழிற்பாடு என்பனவற்றைத் தடைசெய்யும் வகையில் அல்லது அவற்றுடன் தலையிடும் வகையில்: அல்லது

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட முடியாத பொது மக்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தும் மூலகாரணமாக அமைகின்றவைகளாகும்.

மின்சாரச் சட்டத்தின் I ஆம் அட்டவணையின் 6 ஆம் விடயத்தில், மரத்தினை வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளைத் தறித்தல் அல்லது அதன் வேர்களை வெட்டி விடும் தேவை ஏற்படுகையில், அதன் செய்முறையினை உறுதிப்படுத்த, உரிமம் பெற்ற தரப்பினால் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன

1.5 மின்சாரச் சட்டத்தின் 2அ (ஆ). பிரிவின் கீழ், அட்டவணை I இன் 3, 4, 5,மற்றும் 6 ஆம் விடயங்களுக்கான அதிகாரங்களை, ஆணைக்குழு எவரேனும் பிரதேச செயலாளருக்கு கையளிக்க அதிகாரமுண்டு. அதற்பேற்ப ஆணைக்குழு அட்டவணை I இன் விடயம் 4 மற்றும் 6 விடயங்களுக்கான அதிகாரங்களை பிரதேச செயலாளருக்கு வழங்கியுள்ளது.

1.6 இவ் ஆவணமானது பின்வருவனவற்றை நோக்காக கொண்டுள்ளது.

(அ) பிரதேச செயலாளரின் அதிகாரத்தினை கோருவதற்கான விண்ணப்பதாரர்களாகவுள்ள உரிமம் பெற்ற தரப்புகளுக்கு வழிகாட்டுதல்:

(i) காணியின் மீது அல்லது காணியின்மேல் அல்லது காணியின்கீழ் மின் மார்க்கத்தை நிறுவுவதற்கும் நிறுவிவைத்திருப்பதற்கும்.

(ii) மின் மார்க்க அல்லது பொறித் தொகுதியின் நிறுவுகை, பேணுகை அல்லது தொழிற்பாடு என்பனவற்றைத் தடைசெய்யும் வகையில் அல்லது அவற்றுடன் தலையிடும் வகையில் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஆபத்துக்கான மூலகாரணமாக அமைகின்ற வகையில் உள்ள மரத்தினை தேவை ஏற்படும் போது வெட்டி வீழ்த்த அல்லது அதன் கிளைகளைத் தறிக்க அல்லது அதன் வேர்களை வெட்டி விடவுமாகும்.

(ஆ) மின்சாரத் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர்களுக்கு வழிகாட்டலினை வழங்க:

(i) மேல் குறிப்பிட்ட அ.(i) இன் செயற்பாடுகளுக்காக உரிமம் பெற்ற தரப்புபளுக்கு அதிகாரத்தினை வழங்கல் அல்லது தடைசெய்யதல்.

(ii) வழி அனுமதியினை சுவிகரிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு சிபாரிசுகளை வழங்கல்.

(இ) மின்சாரச் சட்டத்தின் அட்டவணை I இன் 4 ஆம் விடயத்தில் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட்ட பிரதேச செயலாளர்களுக்கு வழிக்காட்டலினை வழங்கல்.

(i) உரிமம் பெற்ற தரப்பினரிடம் வழியனுமதியினை பெறுவதற்காக, காணியின் சொந்தக்காரர் பெறக்கூடிய நியாயமான இழப்பீட்டுத் தொகையினை மதிப்பிடுவதற்கு.

(ii) அளிக்கப்படும் வழியனுமதியின் உரிமையினை பிரயோகிகப்பதன் விளைவாக, எவருக்கும் ஏதேனும் காணியை அல்லது அசைவுள்ளவற்றைத் துய்யப்படுத்தி குழப்பமிடுவிடத்து, அவர் அத்தகைய குழப்பம் தொடர்பில் உரிமம் பெற்ற தரப்பினரிடம் பெறுவதற்கான நட்டஈட்டுத் தொகையினை மதிப்பிடுவதற்கு,

(iii) தனது சொந்தப் பிரேரணையின் மீது அல்லது பாதிக்கப்படும் எவரின் விண்ணப்பத்தின் மீது, உரிமம் பெற்ற தரப்பினர் மேல் குறிப்பிட்ட (i) மற்றும் (ii) ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் நட்டஈட்டை எவருக்கும் செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளாரா என்பதைத் தீர்மானிப்பதற்காக விசாரணைகளை நடாத்துவதற்கு

(ஈ) மின்சாரச் சட்டத்தின் அட்டவணை I இன் 6 ஆம் விடயத்தில் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட்ட பிரதேச செயலாளர்களுக்கு வழிகாட்டலினை வழங்கலில், உரிமம் பெற்ற தரப்பினருக்கு மரத்தினை வெட்டுதல் அல்லது அதன் கிளைகளைத் தறித்தல் அல்லது வேர்களை வெட்டுதல் போன்ற செயற்பாடுகளுக்கான கட்டளையினை வழங்கல் மற்றும் அது தொடர்பான தரப்பினரின் முறைப்பாடுகளை கேட்கப்படுதற்கு வாய்ப்பொன்றை அளித்ததன் பின்னர், காணியின் சொந்தக்காரரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் (அம் மரம் வளரும் காணி) உரிமம் பெற்ற தரப்பினருக்கு என்ன வெலவுகள் (எவையுமிருப்பின்) செலுத்தப்பட வேண்டுமெண்பது பற்றிய ஏதேனும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கலாம்: மற்றும்,

(உ) காணியின் சொந்தக்காரர், காணியின் இருப்பாட்சியாளர் மற்றம் பொது மக்களுக்கு வழியனுமதியினை அளித்தல் அல்லது மறுத்தல் தொடர்பிலான செயன்முறைகளுக்கான தகவல்களை வழங்குதல்

## பாகம் 2 – வழியனுமதிக்கான வழிகாட்டல்கள்

உரிமம் பெற்ற தரப்பினருக்கு, வழியனுமதியினை பெற்றுக்கொள்வதற்கான இரு சாத்தியமான சந்தர்ப்பங்கள் உள்ளன:

(அ) புதிய மின் மார்க்க நிறுவுகை: அல்லது

(ஆ) ஏற்கனவே உள்ள மின் மார்க்த்தினை காணியின் சொந்தக்கார்/இருப்பாட்சியாளர் அகற்றுமாறு வேண்டுகோள் விடுக்கம் சந்தர்ப்பத்தில்

2.1 புதிய மின் மார்க்க நிறுவுகை

(அ) உரிமம் பெற்ற தரப்பு, வழியனுமதியியைக் கோரி, காணியின் இருப்பாட்சியாளருக்கு ஆகக்குறைந்தது இருபத்தொரு (21) நாட்கள் அறிவித்தலையாவது (இணைப்பு I இல் தரப்பப்பட்ட மாதிரி அமைப்பிற்கமைய) விடுத்தல் வேண்டும்.

(ஆ) இருப்பாட்சியாளர் காணியின் சொந்தக்காரர் இல்லாதவிடத்து(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பிரதியானது காணியின் உரிமையாளருக்கும் வழங்கப்படல் வேண்டும். உரிமம் பெற்ற தரப்பு விடுத்த அறிவித்தல் இருப்பாட்சியாளரினால் பெற்றக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.(இருப்பாட்சியாளர் காணியின் உரிமையாளர் இல்லாவிடத்து, உரிமையாளரினால்)

(இ) பந்தி (அ) இல் குறிப்பிட்டப்படி, உரிமம் பெற்ற தரப்பு, வழியனுமதியினை பெறுவதற்கான அனைத்து நியாயமான முயற்சிகளையும் மேற் கொள்ள வேண்டும். காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர், மின் உரிமம் பெற்ற தரப்பின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப, வழியனுமதியினை வழங்க சம்மதித்தால், இரு தரப்பினரும் ஓர் உடன்படிக்கையினை உறுதிப்படுத்த வேண்டும். (இணைப்பு II). எச் சந்தர்ப்பத்திலும் உரிமம் பெற்ற தரப்பு விடுத்த அறிவித்தலுக்கான பதிலினை இருப்பாட்சியாளர் அல்லது உரிமையாளரிடம் பெற்றுக் கொள்ளுவது நியாயமானது.

(ஈ) உரிமம் பெற்றத் தரப்பு, வழியனுமதியினை பெறுவதற்கான அனைத்து நியாயமான முயற்சிகளையும் மேற்கொண்டும், அதை பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில், உரிமம் பெற்ற் தரப்பு. சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கு மின் மார்கத்தினை நிறுவதற்கான அதிகாரத்தை பெற்றுக்கொள்ளுவதற்கான விண்ணபத்தினை(இணைப்பு iii) அனுப்ப வேண்டும். இவ் விண்ணபத்தில் உரிமம் பெற்ற தரப்பு. வழியனுமதியினை பெறுவதற்கு எடுத்த அனைத்து முயற்சிகளையும் குறிப்பிடல் வேண்டும்.

(உ) பிரதேச செயலாளர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு (6) வார காலத்தினுள் சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளருக்கு சந்தர்ப்பம் வழங்கி, விசாரணையினை நடாத்தி:

அ. அவர் நிபந்தனையற்ற முறையில் அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப மற்றும் அவரின் நிபந்தனைக்குற்பட்ட கருத்துக்களுக்கு அமைய மின் மார்க்கத்தை நிறுவுகதற்கான அதிகாரத்தினை வழங்கலாம்.

ஆ. உரிமம் பெற்ற தரப்பினரின் மின் மார்க நிறுவலினை தடைசெயயலாம் அல்லது,

இ. உரிமம் பெற்ற தரப்பினருக்கு உரிமத்தில் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வழியனுமதி அத்தியவசியம் என கணப்படுமிடத்து, காணியை சுவீகரிப்பது அவசியம் எனக் கருதும் பட்சத்தில், பிரதேச செயலாளர், ஆணைக்குழுவிற்கு தனது சிபாரிசுகளை (இணைப்பு IV இல் குறிப்பிட்டப்படி) அனுப்பிவைக்கலாம்.

(ஊ) எவ்வாறாயினும், பிரதேச செயலாளர் பின் வரும் சந்தர்பந்களில் வழியனுமதிக்கான காணி சுவீகரிப்புக்காக சிபாரிசு செய்ய முடியாது: அதிகாரமளிக்கப்பட்ட வதிவிடம், அல்லது உரிய சட்டத்தின் கீழ் குடியிருப்பு நிர்மாணத்திற்குரிய கட்டடத்தின் திட்டமிடலுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில்.

(ஏ) பிரதேச செயலபளரின் சிபாரிசுகள் கிடைக்கப் பெற்ற பின், உரிமம் பெற்ற தரப்பினருக்கு, உரிமத்தில் அங்கிகரிக்கப்பட்ட மின் மார்க்கத்தினை குறிப்பிட்ட காணியின் மேல், கீழ் அல்லது காணியில் நிறுவுவது, தேவையானது அல்லது உகந்தது என திருப்தியடையும் பட்சத்தில், ஆணைக்குழுவானது, வழியனுமதி சுவீகரிப்பை அமைச்சருக்கு பரிந்துரைக்கும். அமைச்சர், வழியனுமதி சுவீகரிப்பினை வர்த்தகமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அங்கிகரிக்குமிடத்து, அவ் வழியனுமதியானது பொது மக்களின் தேவைகளுக்காக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு உரிமம் பெற்ற தரப்பினருக்கு கைமாற்றவும்படலாம். அச் சுவீகரிப்புக்குரிய ஏதேனும் கட்டணத் தொகையானது உரிமம் பெற்ற தரப்பினரினால் செலுத்தப்படும்.

2.2 காணியின் உரிமையாளரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட மின் மார்க்கத்தினை அகற்றுமாறு வேண்டுகோளொன்றை விடுக்கும் சந்தர்ப்பத்தில்:

(அ) காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் உரிமம் பெற்ற தரப்பிடம் தனது காணியிலுள்ள மின் மார்கத்தினை அகற்றுமாறுபின்வரும் சந்தர்ப்பங்களில் அறிவித்தல் ஒன்றினை விடுக்கலாம். இது (மின்சாரச் சட்டத்தின் அட்டவணை I இன் 3 ஆம் விடயத்திற்க அமைய, அல்லது இரு தரப்பினருக்குமிடையிலான உடன்படிக்கைக்கு அமைய)

(i) வழியனுமதியில் குறிப்பிட்டபடி, கால முடிவின் பின் தீர்மானிக்கப்பட வேண்டியதாயிருப்பின்:

(ii) வழியனுமதியில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அதற்கான தவணை முடிவடைந்திருப்பின்:

(iii) வழியனுமதி வழங்கப்பட்ட பின், உரிமை மாற்றத்தினால் அல்லது இருப்பாட்சி மாற்றத்தினால் வழியனுமதியின் பிணைப்பு நீக்கப்படும் போது.

(ஆ) அவ்வாறு அறிவித்தல் விடுக்கும் பட்சத்தில், உரிமம் பெற்ற தரப்பினருக்கு நிறுவப்பட்ட மின் மார்கத்தினை நிறுவப்பட்ட நிலையில் வைத்திருக்க வேண்டிய தேவை இருப்பின், வழியனுமதியினை மீண்டும் பெற அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

(இ) உரிமம் பெற்ற தரப்பு, வழங்கப்பட்ட வழியனுமதியினை பாதுகாகக்கத் தவறும் பட்சத்தில். உரிய பிரதேச செயலாளருக்கு நிறுவப்பட்ட மின் மார்க்கத்தினை நிறுவப்பட்ட நிலையிலேயே வைத்துக் கொள்வதற்குரிய அதிகாரத்திற்கான (இணைப்பு III) விண்ணப்பத்தினை அனுப்ப முடியும். இவ் விண்ணப்பத்தில் உரிமம் பெற்ற தரப்பு, வழங்கப்பட்ட வழியனுமதியினை நிலைநிறுத்த எடுத்த அனைத்து முயற்சிகளையும் குறிப்பிட வேண்டும்.

(ஈ) பிரதேச செயலாளர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு (6) வார காலத்தினுள் சம்பந்தப்பட்ட காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளருக்கு சந்தர்ப்பம் வழங்கி, விசாரணையினை நடாத்தியதின் பின்

அ. மின் மார்க்கத்தினை நிறுவிய நிலையிலேயே வைத்திருக்க உரிமம் பெற்ற தரப்பினருக்கு நிபந்தனையற்ற முறையில் அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப மற்றும் அவரின் நிபந்தனைக்குற்பட்ட கருத்துக்களுக்குப் பொருத்தமான அதிகாரத்தை வழங்க முடியும்.

ஆ. உரிமம் பெற்ற தரப்பினர் நிறுவப்பட்ட மின் மார்க்கத்தினை அகற்றவதற்கு அதிகாரமளிக்கப்படலாம் அல்லது,

இ. உரிமம் பெற்ற தரப்பினருக்கு அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வழியனுமதி அத்தியவசியமென காணப்படுமிடத்து, காணி சுவீகரித்தல் அவசியமென கருதும் பட்சத்தில், பிரதேச செயலாளர், ஆணைக்குழுவிற்கு தனது சிபாரிசுக்களை ( இணைப்பு IV இல் குறிப்பிட்டப்படி) அனுப்பிவைக்கலாம்.

(உ) ஆணைக்குழுவானது, வழியனுமதி சுவீகரிப்பை அமைச்சருக்கு பரிந்துரைக்கும். அமைச்சர், வழியனுமதி சுவீகரிப்பினை வர்த்தகமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அங்கிகரிக்குமிடத்து, அவ் வழியனுமதியானது பொது மக்களின் தேவைகளுக்காக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு உரிமம் பெற்ற தரப்பினருக்கு கைமாற்றவும்படலாம். ஆச் சுவீகரிப்புக்குரிய ஏதேனும் கட்டணத் தொகையானது உரிமம் பெற்ற தரப்பினரினால் செலுத்தப்படும்.

(ஊ) பந்தி (அ) இல் குறிபபிடப்பட்ட அறிவித்தல் திகதியிலிருந்து, தொடங்குகினற மூன்று மாதக் காலப்பகுதியினுள், உரிமம் பெற்ற தரப்பு:

(i) பந்தி (இ) இல் குறிப்பிட்டப்படி அவசியமான வழியனமதியினை பெற விண்ணப்பமொன்றினைச் செய்யத்தவறுமிடத்து:

(ii) பந்தி (இ) இன், அவசியமான வழியனுமதி கெறுவதற்கு விண்ணப்பமொன்றை அனுப்பி அவ் விண்ணப்பம் பிரதேச செயலாளரினால் மறுக்கப்படுமிடத்து:

(iii) மின்சாரச் சட்டம் அட்டவணை 1 இன் 7 ஆம் விடயத்தின் கீழ்,காணியின் வலுக் கட்டாயக் கொள்வனவை அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றைக் பெறுவதற்கு தவறுமிடத்து:

உரிமம் பெற்ற தரப்பினர், அக்காலப் பகுதியின் முடிவில், அல்லது உட்பந்தி (ii) இன் விடயத்தில், பிரதேச செயலாளர் முடிவெடுத்த திகதியிலிருந்து, தொடங்குகின்ற ஒரு மாதக் காலப்பகுதியின் முடிவில், அறிவித்தலுக்கு அல்லது பிரதேச செயலாளரின் குறிப்பிட்ட கால நீடிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

2.3 வழியனுமதி அளித்தல் தொடர்பிலான இழப்பீடு

(அ). மின்சாரச் சட்டம் அட்டவணை 1 இன் 3 ஆம் விடயத்தின் கீழ், வழியனுமதி அளித்தலின் போது, ( காணி சவீகரித்தல் சட்டத்தின் கீழ் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் மூலமாக), காணியின் உரிமையாளர் பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட நியாயமான இழப்பீடொன்றை உரிமம் பெற்ற தரப்பினரிடம் மீட்கமுடியும். ஆகவே, பிரதேச செயலாளர்( மேல் குறிப்பிடப்பட்ட 2.1(உ) மற்றும் 2.2(ஈ) கீழ்) உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரத்திற்கான விண்ணபத்திற்கமைய நடைபெற்ற விசாரணையின் போது, காணியின் உரிமையாளர் வழியனுமதி அளித்தல் தொடரபில் அவரினால் முன்வைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய கோரப்பட்ட இழப்பீட்டுத் தொகையைக் கருத்தில் கொண்டு முக்கிய கவனம் செலுத்தல் வேண்டும்.

(ஆ) வழியனமதி அளிக்கப்பட்டது தொடர்பாக ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கையில் காணிக்கு அல்லது அசைவுள்ளவற்றிற்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்படுமிடத்து, காணியில் அல்லது அசைவுள்ளவற்றில் அக்கறை கொண்டுள்ள எவரேனுமொருவர், அச் சேதம் தொடர்பில் நியாயமான நட்டஈட்டை உரிமம் பெற்ற தரப்பிடம் அறவிடலாம்.

(இ) வழியனுமதி அளிக்கப்பட்டது தொடர்பாக ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கையில் காணியை அல்லது அசைவுள்ளவற்றைத் துய்யப்படுத்தி குழப்பப்படுமிடத்து, எவருக்கும் ஏதேனும் குழப்பம் ஏற்பட்டால். அது தொடர்பில் பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலான நட்டஈட்டை அவர் உரிமம் பெற்ற தரப்பிடம் அறவிடலாம்.

(ஈ) பிரதேச செயலாளர், அவரின் சொந்தப் பிரேரணையின் மீது, அல்லது பாதிக்கப்படும் ஒருவரின் விண்ணபத்தின் மீது, உரிமம் பெற்ற தரப்பினர் (அ), (ஆ) மற்றும் (இ) ஆம் பந்தியின் கீழான எதேனும் நட்டஈட்டை எவரேனுமாருவருக்கு செலுத்துவதற்கு ஆளாகவுள்ளாராவென்பதைத் தீர்மானிப்பதற்கு விசாரணைகளை நடத்தலாம்.

(உ) பிரதேச செயலாளர் (ஈ) பந்தியின் கீழ் நடைபெற்ற ஏதேனும் விசாரணையின் படி, ஏதேனும் நட்டஈட்டை செலுத்தல் வேண்டும் என தீர்மானித்தால், அதன் படி, உரிமம் பெற்ற தரப்பு செலுத்த வேண்டிய நட்டஈட்டை, பிரதேச செயலாளரின் அதற்கான தீர்மானத்தினை உரிமம் பெற்ற தரப்பு மற்றும் நட்டஈட்டுக்கு விண்ணப்பித்துள்ள அல்லது நட்டஈடு அளிக்கப்பட்ட எவரேனுமொருவருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலில் பிரதேச செயலாளர் அவ்வாறான நட்டஈட்டுக்கான தீர்மாத்தின் அடிப்படையினை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(ஊ) நட்டஈடு செலுத்தத் தேவையற்றது என்னும் பிரதேச செயலாளரின் தீர்மானத்தினால் இன்னலுறுகின்ற அல்லது பிரதேச செயலாளரின் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகைபற்றி அதிருப்தியடைகின்ற எவரும் எந்த உரிமம் பெற்ற தரப்பிடம் நட்டஈடு கோரப்பட்டதோ அந்த உரிமம் பெற்ற தரப்பினருக்கெதிராக, அவரினால் கோரப்படும் நட்டஈட்டை அல்லது அவரினால் கோரப்படும் நட்டஈட்டுத் தொகைக்கும், பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தை அறவிடுவதற்குத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஒரு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுக்கலாம்.

(இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு, மின்சாரச் சட்டத்தின் அட்டவணை I இன் (5), (6) மற்றும் (7) ஆம் பந்தியை பார்க்கவும்.)

## பாகம் 3 - மரங்களை வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளைத் தறித்தலுக்கான வழிக்காட்டல்கள்

*(இப் பகுதியில் "மரம்" என்பது, ஏதேனும் புதர்ச்செடியையும் உள்ளடக்கும் என்பதுடன், "வெட்டிவீழ்த்தல்" மற்றும் "கிளைகளைத் தறித்தல்" என்பவற்றுக்கான குறிப்பீடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். "காணி" என்பது, மரமானது எந்தக் காணியின் மீது வளர்கின்றதோ அந்தக் காணி என்ற பொருளாகும்.)*

3.1 நிறுவப்பட்டிருக்கும் அல்லது நிறுவப்படவிருக்கும் மின்சார மார்க்மொன்றுக்கு அல்லது மின்பொறித் தொகுதியொன்றிற்கு மிக அருகாமையிலுள்ள மரமொன்று, உரிமம் பெற்ற தரப்பு அந்த மரம் மின்சார மார்க்கமொன்றின்/மின் பொறித் தொகுதியொன்றின் நிறுவுகைக்கு, பாராமரிப்பு அல்லது தொழிற்பாட்டிற்கு தடையாக அல்லது இடையூறாக அல்லது பொது மக்களுக்கு ஆபத்தாக அமையுமெனக் கருதுமாயின், காணியின் இருப்பாட்சியாளருக்கு குறித்த மரத்தை வெட்டி வீழ்த்துமாறு அல்லது அகற்றுமாறு அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குமாறு கோரி அறிவித்தலொன்றை (இணைப்பு V) விடுப்பது அவசியமாகும்.

3.2 இருப்பாட்சியாளர் காணியின் சொந்தக்காரராக இல்லாதவிடத்து, மேல் 3.1 இன் கீழான, அறிவித்தலின் பிரதியொன்று சொந்தக்காரருக்கும் கொடுக்கப்படல் வேண்டும். உரிமம் பெற்ற தரப்பு, இருப்பாட்சியாளரினால் அவ் அறிவித்ல் ஒப்புக்கொள்ளப்பட்டதினை உறுதி செய்தல் வேண்டும். (இருப்பாட்சியாளர் காணியின் சொந்தக்காரராகவில்லாதவிடத்து காணியின் செந்தக்காரரினால் ஒப்புக்கொள்ளப்படல் வேண்டும்).

3.3 அறிவித்தலொன்று கொடுக்கப்பட்டதிலிருந்து ஏழு (7) வேலை நாட்களினுள்:

(அ) விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இருப்பாட்சியாளர் அல்லது உரிமையாளர் இணங்கி, அந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளை அனுசரித்து நிறைவேற்றினால், இருப்பாட்சியாளர் அல்லது உரிமையாளருக்கு ஏற்பட்ட நியாயமான செலவுகளை உரிமம் பெற்ற தரப்பு செலுத்துதல் வேண்டும்.

(ஆ) அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணுங்காது, காணியின் உரிமையாளர் அல்லத இருப்பாட்சியாளர் ஆகயோரில் எவருமே எதிர் அறிவித்தலொன்றினை விடுக்கவில்லையாயின், உரிமம் பெற்ற தரப்பு குறித்த, மேல் 3.1 பந்தியில் குறிப்பிட்ட விளைவுகளை தவிர்கும் முகமாக மரத்தினை வெட்டி வீழ்த்த அல்லது அகற்ற அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

(இ) குறித்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்காது, எதிர் அறிவித்தலலொன்றை காணியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் விடுத்தால், இது விடயமாக உரிய பிரதேச செயலாளருக்கு குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் (இணைப்பு VI).

3.4 மேல் குறிப்பிட்ட பந்தி 3.3 (இ) இன் கீழ், பிரதேச செயலாளர் தனக்கு கிடைக்கப் பெற்ற குறிப்பீடுகளின் படி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சந்தர்ப்பத்தினை வழங்கி விசாரணையினை நடத்தி, தான் நீதியானது எனக்கருதும் கட்டளையொன்றை பிறப்பிக்க வேண்டும். இக் கட்டளையானது:

(அ) எதிர் அறிவித்தலொன்றை விடுத்த எவருக்கும் அறியப்படுத்தியதன் பின்னர், குறித்த மரத்தை வெட்டிவீழ்த்துமாறு அல்லது அகற்றுமாறு அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குமாறு உரிமம் பெற்ற தரப்புக்கு அனுமதியினை வழங்குதலும்

(ஆ) காணியின் உரிமையாளரினால் அல்லது இருப்பாட்சியாளரினால் உரிமம் பெற்ற தரப்புக்கு செலுத்தப்பட வேண்டிய செலவுகள் (ஏதுமிருப்பின்) அத்தகைய செலவுகள் எவ்வளவு என்பனவும் ஆகும்.

3.5 உரிமம் பெற்ற தரப்பு, உபபந்தி 3.3 (ஆ) அல்லது 3.4 பந்தியின் கீழ், பிறப்பிக்கப்பட்ட கட்டளையொன்றினைப் பின்பற்றிச் செயற்படுகின்றவிடத்து, உரிமம் பெற்ற தரப்பு:

(அ) நல்ல மரவளர்ப்பு செய்முறைக்கு இணங்கவும், மரங்களுக்கு, வேலிகளுக்கு, புதர் வேலிகளுக்கு மற்றும் வளர்ந்து வருகின்ற பயிர்களுக்கு இயன்றளவு குறைந்த சேதத்தை விளைவிக்கும் வகையில் மரங்களை வெட்டி வீழ்த்த அல்லது அவற்றின் கிளைகளைத் தறிக்க அல்லது அவற்றின் வேர்களை வெட்விட நடவக்கை எடுக்கவேண்டும்.

(ஆ) வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களும், தறிக்கப்பட்ட கிளைகளும் அல்லது வெட்டப்பட்ட வேர்களும் உரிமையாளரின் அல்லது இருப்பாட்சியாளரின் பணிப்புகளுக்கிணங்க அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும்:

(இ) காணிக்கு விளைவிக்கப்படும் ஏதேனும் சேதத்தை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

## பாகம் 4 –காணியினுள் அல்லது வளவினுள் பிரவேசித்தல்

4.1 உரிமம் பெற்ற தரப்பினால் அதிகாரமளிக்கப்படும் அலுவலகர் எவரேனும், பின்வரும் நோக்கங்களுக்காக எவையேனும் காணியினுள் அல்லது வளவுகளுக்குள் பிரவேசிக்கலாம்:

(அ) சட்டமுறையாக ஏற்கனவே இடப்பட்டுள்ள மின் மார்க்கத்திற்கு அல்லது மின் பொறித்தொகுதிக்குப் பதிலாக, அல்லது அதற்கு மேலதிகமாக பதிய மின் மார்க்கமொன்றை அல்லது புதிய மின் பொறித் தொகுதியை இடுதல்: அல்லது

(ஆ) அத்தகைய ஏற்கனவே உள்ள மின்மார்கத்தினை அல்லது மின் பொறித் தொகுதியை பழுதுப்பார்த்தல் அல்லது மாற்றுவதற்கு.

4.2 ஆயினும், உரிமம் பெற்ற தரப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலகர் எவரேனும், பந்தி 4.1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக காணி அல்லது வளவினுள் பிரவேசிக்க கட்டாய கோரிக்கையொன்றினை:

(அ) எதிர்ப்பாக்கும் செயல்களின் தன்மை, அளவு பற்றி இயன்றளவு முழுமையாகவும் செம்மையாகவும் கூறி, மின் பரிசோதகரால் அல்லது உரிமம் பெற்ற தரப்பு அல்லது உரிமம் பெற்ற தரப்பின் அலுவலரினால் பிரவேசத்திற்கான நோக்கம் பற்றி மூன்று நாட்கள் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய:

(ஆ) அவரது அதிகாரம் பற்றிய சான்றைக் காண்பிக்கும் படி தேவைப்படுத்தப்பட்டால், அவர் அவ்வாறு செய்தாலொழிய:

(இ) பிரவேசத்தைப் பின்பற்றி விளைவிக்கப்படக்கூடிய ஏதேனும் குழப்பம் இயலாமை அல்லது வளவுகளின் உரிமையாளருக்கு நியாயமான நட்டஈடு செலுதப்பட்டிருந்தாலொழிய பிறப்பிக்க முடியாது.

4.3 உட்பந்தி 4.2 (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் அறிவித்தலானது:

(அ) காணியில், இருப்பாட்சியாளர் உள்ளவிடத்து, இருப்பாட்சியாளருக்கு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) காணியில் எவரேனும் குடியிருக்காதவிடத்து, உரிமையாளரின் பெயரும் முகவரியும் அறியப்பட்டுள்ளவிடத்து, அல்லது நியாயமான விழிப்புக்கவனத்துடன் நிச்சயிக்கப்பட முயுமானதாகவுள்ளவிடத்து உரிமையாளருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(இ)) காணியானது குடியிருப்பு செய்யப்படாதவிடத்தும், உரிமையாளரின் பெயரும் முகவரியும் அறியப்பட்டுள்ளவிடத்து, அல்லது நியாயமான விழிப்குக்கவனத்துடன் நிச்சயிக்கப்பட முடியாது உள்ளவிடத்து, காணியின் எளிதில்பார்க்கக்கூடிய, எளிதில் கவரும் இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்: அத்துடன்

(ஈ) காணியானது ஏதேனும் பகிரங்க நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுமிடத்து அல்லது ஒதுக்கப்பட்டிருக்குமிடத்து, அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமாகவுள்ள அலுவலருக்கு அல்லது வேறு எவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

4.4 உரிமம் பெற்ற தரப்பினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலகர், உபபந்தி 4.2(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் நோக்கத்திற்காக அக்காணியினுள் பிரவேசிக்க உரித்துடையவராவர்.

4.5 பந்தி 4.1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்குளுக்காக, உரிமம் பெற்ற தரப்பினால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய எந்தவெரு நபரும் காணி அல்லது வளவினுள் பிரவேசிக்க முடியாது.

4.6 ஏதேனும் காணியினுள் அல்லது வளவினுள் பிரவேசிக்கும் அதிகாரத்தினை எவரேனுமொருவர் பிரயோகிக்கமிடத்து, அவர் எந்த உரிமம் பெற்ற தரப்பிடம் எழுத்தினால் அதிகாரமளிக்கப்பட்டாரோ அந்த உரிமம் பெற்ற தரப்பு, அத்தகைய பிரவேசத்தின் விளைவாகக் காணிக்கு விளைவிக்கப்படும் ஏதேனும் சேதத்தை ஈடுசெய்தல் வேண்டும்.

4.7 ஏதேனும் காணியினுள் அல்லது வளவினுள் பிரவேசிக்கும் அதிகாரத்தினை பிரயோகிக்குமிடத்து, ஏதேனும் காணிக்கு அல்லது ஏதேனும் அசைவுள்ள ஆதனத்திற்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்படுமிடத்து, அக்காணியில் அல்லது அசைவுள்ள ஆதனத்தில் அக்கறை கொண்டுள்ள எவரேனும் அந்த உரிமையினை பிரயோகித்த உரிமம் பெற்ற தரப்பிடம் அச் சேதம் தொடர்பிலான நட்டஈட்டை அறவிடலாம்.

4.8 அத்துடன் அத்தகைய உரிமையினை பிரயோகித்ததன் விளைவாக எவராருவர் ஏதேனும் காணியை அல்லது அசைவுள்ள ஆதனத்தைத் துய்யப்படுத்தி குழப்புமிடத்து, அவர் அவ் உரிமம் பெற்ற தரப்பிடமிருந்து ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற அக்குழப்பம் தொடர்பிலான நியாயமான நட்டஈட்டை அறவிடலாம்.

4.9 பிரவேசிக்கும் அதிகாரத்தினை பிரயோகிக்க எத்தனிக்கும் போது, அவ் உரிமம் பெற்ற தரப்பு அவ்வளவுகளினுட் பிரவேசிப்பதற்கு, வலோத்காரத்தைப் பயன்படுத்தாமல் வேறுவகையாக, நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ள பட்சத்திலும் அம்முயற்சிகள் வெற்றியடையாதுவிடின், அது அவ்வளவுகள் அமைந்துள்ள இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு உரிமம் பெற்ற தரப்பினால் அதிகாரமளிக்கப்படும் ஓர் அலுவரருக்கு வலோத்காரமாக அவ்வளவுகளினுட் பிரவேசிப்பதற்கான கட்டளையென்றிற்காக விண்ணப்பிக்கலாம். (அத்தகைய ஒழுங்கு தொடர்பான மேலதிக தகவல்களுக்க மினசாரச் சட்டம் அட்டவணை II இன் 9 ஆம் விடயத்தினை பார்கவும்).

4.10 பிரவேசத்திற்கான உரிமை அல்லாத அதிகாரத்தினை பின்பற்றி உரிமம் பெற்ற தரப்பினால், அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவர் எவையேனும் வளவுகளினுட் பிரவேசிக்குமிடத்து,

(அ) அப்பிரவேசம் காரணமாக அவ்வளவுகளின் பாதுகாப்பு குறைக்கப்படாதிருப்பதனை அவ்வலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும்: அத்துடன்

(ஆ) உரிமம் பெற்ற தரப்பினர் அவ்வளவினுள் பிரவேசிப்பதாலும் ஏதெனும் நடவடிக்கையை எடுப்பதாலும் அல்லது அவ்வளவுகளைப் பாதுகாப்பதினாலும் அலுவலரினால் அல்லது அவருடன் செல்லுகின்ற எவரேனுமொருவரினால் விளைவிக்கப்படும் சேதத்தை ஈடுசெய்யதல் வேண்டும் அல்லது அதற்கான நட்டஈட்டை செலுத்துதல் வேண்டும்.

## பாகம் 5 – பொது மக்களுக்கான தகவல்கள்

5.1 வழியனுமதி

(அ) மின்சாரச் சட்டத்திட்கமைய உரிமம் பெற்ற தரப்பு: உரிய அதிகாரி அல்லது உள்ளூரதிகார சபையின் சம்மதத்துடன் எவையேனும் மின் மார்க்கத்தினை அல்லது மின்பொறித் தொகுதியினை, ஏதேனும் தெருவின் கீழ், மேல், மீது, நெடுகில் அல்லது குறுக்காக நிறுவுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மின் உரிமம் பெற்ற தரப்பு இவ்வாறான சந்தர்ப்பங்களில் காணியின் உரிமையாளரிடமிருந்து வழியனுமதியினை பெறத் தேவையில்லை.

(ஆ) ஆனாலும், ஏதேனும் காணியின் மீது, கீழ் அல்லது மேல் மின்மார்க்கமொன்றை நிறுவதற்கு, உரிமம் பெற்ற தரப்பு வழியனுமதியினை பெற வேண்டியுள்ளது. உரிமம் பெற்றத் தரப்பினர் கீழ் குறிப்பிட்டவாறு வழியனுமதியினை பெற்றுக் கொள்ளலாம்.

- (i) தரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்திய ஒப்பந்தத்திற்கூடாக (உரிமம் ˙ பெற்ற தரப்பினர் மற்றும் காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர்).
- (ii) பிரதேச செயலாளரிடம் பெறப்பட்ட அதிகாரத்தினூடாக: அல்லது
- (iii) வழியனுமதியினை சுவீகரித்தல் மூலமாக.

(இ) ஆரம்பத்தில், உரிமம் பெற்ற தரப்பு காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளருக்கு வழியனுமதியினைக் கோரி அறிவித்தலினை வழங்கும். மின் மார்ககத்தினை நிறுவதற்குரிய அதிகாரத்தினை கோரி பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்க முன்னர், வழியனுமதி அளிக்கப்படுவதனை (தரப்பினர்களுக்கிடையே ஒப்பந்தத்திற்கூடாக) உறுதிப்படுத்துவதற்கு நியாயமான அனைத்து முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

(ஈ) உரிமம் பெற்ற தரப்பிடமிருந்து வழியனுமதியினை கோரி அறிவித்தலினை காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் பெறுகையில் அவர்:

- (i) எவ்விதமான நியதி நிபந்தனைகளுமற்ற வழியனுமதியினை அளிக்கலாம்:- உரிமம் பெற்ற தரப்பு மின் மார்க்கத்தினை நிறுவும்.
- (ii) அனுமதியினைக் கடைப்பிடிக்கலாம்:- உரிமம் பெற்ற தரப்பு, காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் வழியனுமதியினை வழங்க சம்மதிக்கவில்லை எனக் கருதி, மின் மார்கத்தினை நிறுவதற்கான அதிகாரத்தினை கோரி பிரதேச செயலாளரிடம் விண்ணப்பிக்கலாம்.
- (iii) நியதி நிபந்தனைக்குட்பட்ட வழியனுமதியினை வழங்கலாம்:- உரிமம் பெற்ற தரப்பு காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளரின் நியதி நிபந்தனைகளுக்குட்பட்ட வழியனுமதி அளிப்பினை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது மின் மார்க்க நிறுவுகைக்கான அதிகாரத்தினை கோரி பிரதேச செயலாளரிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியதி நிபந்தனைகளுக்குட்பட விண்ணப்பிக்கலாம்.
- (iv) வழியனுமதி அளிக்க விரும்பாவிடில், அது தொடர்பில் உரிய மின் உரிமம் பெற்ற தரப்பிடம் எழுத்து மூலமாக அறிவிக்கலாம். உரிமம் பெற்ற தரப்பு மின் மார்க்க நிறுவுகைக்குரிய அதிகாரத்தினை கோரி பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கக்கூடும்.

(உ) ஆயினும், உரிமம் பெற்ற தரப்பு வழியனுமதியினை கோரி அறிவித்தலினை வழங்கும் போது, காணியின் உரிமையாளர் மற்றும் இருப்பாட்சியாளர் விழிப்புடன் இருந்து, அவ் அறிவித்தலுக்கான பதிலினை உரிய காலத்தினுள் எழுத்து மூலமாகவோ அல்லது பேச்சு மூலமாகவோ பதிலளித்தல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். காணியின் உரிமையாளர் மற்றும் இருப்பாட்சியாளர் வழியனுமதியினை அளிக்கும் போது அதற்கான நியதி திபந்தனைகள் மற்றும் வழியனுமதியினை அளிப்பது தொடர்பாக தான் ஏற்றுக்கொள்ளவிருக்கும் நட்டஈடு உள்ளிட்ட பிரேரணைகளை உள்ளடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். அவ்வாறான நியதி மற்றும் நிபந்தனைகள் உரிமம் பெற்ற தரப்பினரால் அல்லது பிரதேச செயலாளரினால் ஏதேனும் விசாரணையின் போது ஏற்றுக்கொள்ளப்படக்கூடும். (வழியனுமதி தொடர்பான நட்டஈடு தகவல்கள் தொடர்பில் பந்தி 2.3 ஐ பார்க்கவும்)

(ஊ) காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் ஏற்கனவே காணியின் மீது, கீழ் அல்லது மேல் நிறுவப்பட்டுள்ள மின் மார்க்கமொன்றை அகற்றத் தேவையேற்படின், அது தொடர்பில் உரிமம் பெற்ற தரப்பினருக்கு அறிவித்தலினை விடுக்கலாம்:- மேலதிக தகவல்களுக்கு 2.2(அ) விடயத்தினை பார்க்கவும். அவ் அறிவித்தலினை உரிமம் பெற்ற தரப்பு பெற்றவுடன், நிறுவப்பட்ட மின் மார்கத்தினை அதே நிலையில் வைத்திருக்க, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்(இரு தரப்பினருக்கிடையேயான ஒப்பந்தத்திற்கேற்ப), நிறுவப்பட்ட மின் மார்க்கத்தினை அதே நிலையில் வைத்திருக்கும் அதிகாரத்தினை பெற பிரதேச செயலாளரிடம் விண்ணப்பிக்கலாம்.

(எ) ஏதேனும் காணி தொடர்பிலான விசாரணையினை பிரதேச செயலாளரினால் நடாத்தப்படும் போது, அது தொடர்பில் அக் காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளர் பங்கு பற்றுவது அவரின் நன்மைக்குரியது. இதன் போது தனது பிரட்சனைகளை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறான விசாரணையின் போது வழங்கப்படும் அனைத்து தகவல்களும் அனைத்துத் தரப்பினருக்கும் நியாயமான தீர்மானத்தினை பிரதச செயலாளரினால் எடுப்பதற்கு உதவும்.

5.2 மரங்களை வெடடிவீழ்த்தல் அல்லது அதன் கிளைகளைத் தறித்தல்

(அ) நிறுவப்பட்டிருக்கும்/நிறுவப்படவிருக்கும் மின்சார மார்க்கமொன்றுக்கு/மின்பொறித் தொகுதியொன்றிற்கு அருகில் அல்லது மிக அருகாமையிலுள்ள மரமொன்று, மின்சார மார்கமொன்றின்/ மின் பொறித் தொகுதியொன்றின் நிறுவுகைக்கு, பராமரிப்பதற்கு அல்லது தொழிற்பாட்டிற்கு தடையாக அல்லது இடையூறாக அல்லது பொது மக்களுக்கு ஆபத்தினை விளைவிக்கக்கூடியதாக இருப்பின் அவைகளைத் தடுக்க, குறித்த மரத்தினை வெட்டி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குதல் வேண்டும்.

(ஆ) மின்சார சட்டத்திற்கு அமைய, உரிமம் பெற்ற தரப்பினர் காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளருக்கு பந்தி (அ) இல் குறிப்பிட்டப்படி, அக் காணியில் வளரும் மரத்தினை அவர் வெட்டி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குதல் தொடர்பில அறிவித்தலினை வழங்குதல் வேண்டும்.

(இ) இருப்பாட்சியாளர் அறிவித்தலின்(மின் உரிமம் பற்ற தரப்பினால் மரத்தினை வெட்டி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குதல் தொடர்பில வழங்கப்பட்டது) தேவைகளுக்கு இணங்காவிடில் மற்றும் அது தொடர்பில்

எதிர் அறிவித்தல் எதுவும் ஏழு (07) வேலை நாட்களுக்குள் கொடுக்கப்படாவில், உரிமம் பெற்ற தரப்பினர் அம் மரத்தினை வெட்டி வீழ்த்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு மரத்தினை வெட்டி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குவதற்குவதில் (உரிமம் பெற்ற தரப்பினால் தேவைக்கு ஏற்ப) ஆட்சேபனை உள்ள போது, அவர் உரிமம் பெற்ற தரப்பினருக்கு ஏழு (07) வேலை நாட்களுக்குள் அது தொடர்பில் அறிவித்தலினை கொடுக்க முடியும். பெறப்பட்ட எதிர் அறிவித்தல் தொடர்பில் உரிமம் பெற்ற தரப்பினர் பிரதேச செயலாளருக்கு அறிவிக்க முடியும். இதன் போது பிரதேச செயலாளர் தனது நியாயமான கட்டளையை பிறப்பிற்பதற்கு முன்அத் தரப்பினரின் பிரச்சினைகளை கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவார்.

(உ) காணியின் செந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அறிவித்தலின் தேவைக்கு இணங்குகையில், உரிமம் பெற்ற தரப்பினர் அத் தேவைகளின் இணக்கப்பாட்டிற்கான நியாயமான செலவுகளை செலுத்தல் வேண்டும். ஆனாலும் மரத்தினை வெட்டி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குதற்வதினால் ஏற்படும் பொருளாதார இழப்பீடுகளுக்கான நட்டஈட்டுத் தொகையினை உரிமம் பெற்ற தரப்பினரினால் செலுத்தப்பட மாட்டாது.

(ஊ) பந்தி (அ) இற்கு அமைய, மரத்தினை வெட்டுடி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குவதனால் பந்தி (அ) வில் குறிப்பிட்ட விளைவினை தடுப்பதற்கு செயற்பாடாக அமையுமென பிரதச செயலாளர் கருதுமிடத்து, அவர் இதற்கான விசாரணையினை மேற்கொண்டு அதற்கான கட்டளையினை பிறப்பிக்கலாம்.

(எ) உரிமம் பெற்ற தரப்பினர், பந்தி (இ) மற்றும் (ஊ) கீழ், மரத்தினை வெட்டி வீழ்த்துதல் அல்லது அகற்றுதல் அல்லது அதன் வேர்களை வெட்டி நீக்குவதற்கு அதிகாரமளிக்கப்படும் பட்சத்தில், பந்தி 3.5 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு இணங்கிஒழுகுதல் வேண்டும்.

# பாகம் 6 – பொதுவானவை

6.1 உரிமம் பெற்ற தரப்பினருக்கு:

(அ) உரிமம் பெற்ற தரப்பினர்கள் இவ் வழிகாட்களின் மும் மொழிப் பிரதிகளையும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) பிரதேச காரியாலயங்கள், கிளைகள் மற்றும் நுகர்வோர் சேவை நிலையங்கள் (பொருந்துமாறு) என்பவற்றில் பொது மக்களின் குறிப்பிற்காக வேலை நாட்களில் வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) பந்தி 2.1 (அ) மற்றும் 3.1 கீழ் குறிப்பிடப்பட்ட அறிவித்தலானது, குறிப்பிடப்பட்ட பெறுனரினால் ஒப்புக்கொள்ளப்பட்டால் ஒழிய, அது வழங்கப்பட்டது அல்லது கிடைக்கப்பெற்றது என கருதப்படமாட்டாது. ஆறிவித்தலில் கொடுக்கப்பட்ட காலமானது, அது கிடைக்கப் பெற்ற தினத்திலிருந்து கணக்கில் கொள்ளப்படும்.

(இ) காணியின் சொந்தக்காரர் மற்றும் இருப்பாட்சியாளரிடம் வழியனுமதியினை பெற்றுக்கொள்ளுவதற்கு, சிறந்த உரையாடல் மற்றும் தொடர்பாடல் திறமைகளைக் கொண்ட ஊழியர்களை அமர்த்துதல் வேண்டும். பொருத்தமான தொடர்பாடல் மற்றும் தகவல்களை உரிமையாளர் மற்றும் இருப்பாட்சியாளருக்கு வழங்குவதன் மூலம் தவறான கருத்தக்களிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். அத்துடன் சிறந்த தொடர்பாடல் மூலமாக பல தருணங்களில் வழியனுமதியினை பெற்றுக்கொள்ள முடியுமானதாயிருக்கும்.

(ஈ) மின் மார்க்கங்களின் மற்றும் மின் பொறித் தொகுதிகளின் நிறுவுதலானது, காணியின் பொருளாதார பாவனைக்கு உகந்ததாகவும் மற்றும் பொது மக்களுக்கு ஏற்படத்தக் கூடிய இடையூறுகள் மிக் குறைந்ததாகவும் இருத்தல் வேண்டும். விநியோக மற்றும் கடத்துகை வலையமைப்பில் ஏதேனும் விஸ்தரிப்பு திட்டமிடப்பட்டிருப்பின, அவை மின் மார்க்கத்தின் பாதையினை திட்டமிடும் போது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

6.2 பிரதேச செயலாளர்களுக்கு:

கீழ் குறிப்பிடப்பட்ட பொது வழிகாட்டியினை கடைப்பிடித்தலானது, பாகம் 2 மற்றும் 3 இல் குறிப்பிட்டது தொடர்பில், பிரதேச செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்கிளின் சட்டப்பூர்வத்தையும் நம்பகத் தன்மையினையம் உறுதி செய்யும்.

(அ) அனைத்து விசாரணைகள், கேட்டல்கள் மற்றும் கூட்டங்கள் என்பன நடாத்தப்பட்டு. பிரதேச செயலாளரின் தீர்மானங்கள், இயற்கையான நீதியன் அடிப்படையிலும் மற்றும் தகுந்த செயன்முறைகளையும் பின்பற்றுவதனை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுவனவாக உறுதி செய்தல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொடர்புடைய தரப்பினரும், குறிப்பாக சம்பந்தப்பட்ட காணியின் சொந்தக்காரர் மற்றும் இருப்பாட்சியாளர் நடைபெறவிருக்கும் ஏதேனும விசாரணை அல்லது கேட்டல் மற்றும் கூட்டங்கள் தொடர்பில் உரிய முறையில் அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மேற்பார்வை, கேட்டல் மற்றும் கூட்டங்கள் தொடர்பான அறிவித்தலை பெற்றுக்கொண்டதற்கான பதில்களை பெற்றுக்கொள்ளவது அறிவுறுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

(இ) அனைத்து தொடர்புடைய தரப்பினருக்கும், குறிப்பாக சம்பந்தப்பட்ட காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு மேற்பார்வை, கேட்டல், மற்றும் கூட்டங்களின் போது, அவர்களது கருத்துக்களை வெளியிட சந்தர்பம் வழங்கப்படல் வேண்டும்.

(ஈ) காணியின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளர்ருக்கு அறிவித்தல் கிடைக்கப்படவில்லை அல்லது தவிர்கமுடியாத காரணத்தினால் வரமுடியவில்லை என்பது தெரியவருமிடத்து, திட்டமிடப்பட்ட மேற்பார்வை, கேட்டல் மற்றும் கூட்டம் என்பன காணியின் சொந்தக்காரர் மற்றும் இருப்பாட்சியாளரின் பங்கேற்றலுடன் மீண்டும் நடத்தப்படுவது விவேகமுள்ளதாகும்.

(உ) பந்தி 2.1(உ), 2.2(ஈ), 2.3(ஈ) மற்றும் 3.4 இன் கீழ் நடாத்தப்படும் அனைத்து விசாரணைகள், கேட்டல் மற்றும் கூட்டங்களினதும் நிகழ்ச்சி ஏட்டின் பதிவுகள் பேணப்பட்டு, ஆணைக்குழுவினால் கோரப்படும் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(ஊ) மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வளமாகிய நிலத்தின் பயன்பாட்டினை உகந்த விதத்தில் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படல் வேண்டும்.

(எ) பிரதேச செயலாளரை தவிர்ந்த ஏனைய அதிகாரியினால் நடாத்தப்படும் விசாரணைகள், கேட்டல்கள் மற்றும் கூட்டங்கள் என்பனவற்றின் இறுதித் தீர்மானத்தினை பிரதேச செயலாளர் மட்டுமே எடுத்தல் வேண்டும்.

(ஏ) பிரதெச செயலாளரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் தீர்மானமானது, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதன் அடுப்படையில் தீர்மானிக்கப்பட்டது என்பதனை முறையாக அறிவித்தல் வேண்டும்.

## இணைப்பு I – வழியனுமதியை கோரும் அறிவித்தல் (அறிவித்தல் – 'W')

………………………………………………………………………………………........... என்பவருக்கு

*(காணியின் , இருப்பாட்சியாளரது பெயர், இருப்பாட்சியாளர் உரிமையாளராக இல்லாத பட்சத்தில் காணி உரிமையாளரின் பெயர்)*

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) அட்டவணை 1 இன் விடயம் 3 இன் பிரகாரம் கீழ்காணும் முகவரியில் அமைந்துள்ள காணிக்கு வழியனுமதியை[1] வழங்குமாறு கோரி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

……………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………...........

*(காணியின் முகவரி)*

தேவையான வழியனுமதி பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

நீங்கள் தேவையான வழியனுமதியை வழங்குவதற்கு விரும்பினால், தயவு செய்து இந்த அறிவித்தல் திகதியில் இருந்து இருபத்து ஒரு (21) நாட்களுக்குள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிடப்பட்டுள்ள அலுவலருடன் தொடர்புகொள்ளுங்கள். எனினும், குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் எங்களுக்கு பதில் ஏதும் கிடைக்கவில்லை என்றால், நீங்கள் அந்த வழியனுமதியை வழங்குவதற்கு விரும்பவில்லை எனக் கருதப்படும்.

…………………………………………………

உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரது கையொப்பம்

அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ……………………………………

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: ……………………..............................

முகவரி: …………………………………………………..

திகதி: ...../....../......*(அறிவித்தல் திகதி)*

[1] '**வழியனுமதி**' என்பது குறித்த காணியின் மீது, கீழ் அல்லது மேலால் நிறுவுவதற்கும் நிறுவி வைத்திருப்பதற்கும் மற்றும் அத்தகைய மின்சார மார்க்கத்தை சோதனையிடுதல், பராமரித்தல், சீராக்குதல், பழுதுபார்த்தல், அகற்றுதல் அல்லது மீளிடுதல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் அந்தக் காணிக்குள் பிரவேசிப்பதற்குமான ஒரு உரிமையைக் கொண்டுள்ளதான அந்தக் காணியில் அத்தகைய விருப்பம் எனப் பொருள்படும்.

**(இணைப்பு I இற்கான பின்னிணைப்பு - வழியனுமதியை வழங்கும் போது ஒரு காணி உரிமையாளரினால் பயன்படுத்தப்பட வேண்டிய படிவம்)**

**வழியனுமதி வழங்கல்**

*(உரிமம் பெற்ற தரப்பிற்கு)*

.................................... *(காணியின் முகவரி)* எனும் முகவரியில் அமைந்துள்ள காணியின் **உரிமையாளராகிய / இருப்பாட்சியாளராகிய*** .................................................. நான் (*முழுப் பெயர்*) ...................................................................................................................................
……………………………………………………………………… ................. ஆம் திகதிய அறிவித்தலின் மூலம் கோரப்பட்ட வழியனுமதிக்கு இத்தால் அனுமதியளிக்கின்றேன்.

கீழ்காணும் நிபந்தனைகளுக்கும் நியதிகளுக்கும் அமைய இந்த வழியனுமதி வழங்கப்படுகின்றது:
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

……………………………
காணி உரிமையாளரின் கையொப்பம்

தே.அ.அ. இலக்கம்: ...................................

திகதி: ................................

(*பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடவும்)

## இணைப்பு II - வழியனுமதி பற்றிய உடன்படிக்கை

தரப்புகள்:

(1) பெயர்: ............................................................................... ("உரிமையாளர் / இருப்பாட்சியாளர் *")

முகவரி: ...............................................................................

...............................................................................

...............................................................................

(2) பெயர்: ............................................................................... ("உரிமம் பெற்ற தரப்பு")

முகவரி: ...............................................................................

...............................................................................

...............................................................................

**காணி உரிமையாளரின் / இருப்பாட்சியாளரின்** நிபந்தனைகளும் நியதிகளும்:

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

உரிமம் பெற்ற தரப்பின் நியதிகளும் நிபந்தனைகளும்:

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

காணியின் **உரிமையாளர் / இருப்பாட்சியாளர்** மற்றும் உரிமம் பெற்ற தரப்பு ஆகிய நாம் மேற்குறித்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உடன்படுகின்றோம்.

| | |
|---|---|
| ................................ | ................................ |
| காணியின் உரிமையாளர் | உரிமம் பெற்ற தரப்பு |
| திகதி: ......................... | திகதி: ............................ |

(*பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடவும்)

## இணைப்பு III - ஒரு மின்சார மார்க்கத்தை நிறுவுவதற்கான / நிறுவி வைத்திருப்பதற்கான அதிகாரத்தைக் கோருகின்ற விண்ணப்பம்

…………………………………………………………………………………………………...........................என்பவருக்கு

*(வழியனுமதி தேவைப்படுகின்ற காணி அமைந்துள்ள நிருவாக மாவட்டத்தின் பிரதேச செயலாளர்)*

1. அதிகாரத்தைக் கோரி விண்ணப்பிற்கும் நோக்கம்: (பொருத்தமானவிடத்து '✓' அடையாளமிடுக)

1.1 ஒரு மின்சார மார்க்கத்தை நிறுவுதல் ☐

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை 1 இன் விடயம் 3 இன் (1) ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு மின்சார மார்க்கத்தை நிறுவும் நோக்கத்திற்கு (விடயம் 2 இன் கீழ் விபரங்கள் தரப்பட்டுள்ளன) வழியனுமதியைக் கோரி **ஒரு அறிவித்தல் / அறிவித்தல்கள்* விடுக்கப்பட்டது / விடுக்கப்பட்டன.** எனினும் கூறப்பட்ட காணியின் **உரிமையாளர் / உரிமையாளர்கள்** (பொருத்தமானவிடத்து '✓' அடையாளமிடுக)

☐ அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலம் முடிவடைவதற்கு முன்னர் வழியனுமதியை வழங்குவதற்கு **தவறியுள்ளார் / தவறியுள்ளனர் ***

☐ பயன்படுத்துவதற்கு ஏற்புடையதற்ற நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வழியனுமதியை **வழங்கியுள்ளார்**

1.2 ஒரு மின்சார மார்க்கத்தை நிறுவி வைத்தல் ☐

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை 1 இன் விடயம் 5 இன் (2) பந்தியின் பிரகாரம், காணியின் உரிமையாளர் அல்லது இருப்பாட்சியாளரின் குறித்த காணியில் இருந்து (விபரங்கள் விடயம் 2 இன் கீழ் தரப்பட்டுள்ளன) ஒரு மின்சார மார்க்கத்தை அகற்றுமாறு அறிவித்தலை விடுத்துள்ளார்.

2. மின்சார மார்க்கம் பற்றிய விபரங்கள்:

...........................................................................................................................................

...........................................................................................................................................

...........................................................................................................................................

3. **காணி உரிமையாளரின் / உரிமையாளர்களின் அல்லது இருப்பாட்சியாளரின் / இருப்பாட்சியாளர்களின்*** விபரங்கள் அடங்கிய **எங்களுக்குக் கிடைத்த / எங்களால் வழங்கப்பட்ட அறிவித்தலின் ஒரு பிரதி / பிரதிகள்*** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வழியனுமதியைப் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன, ஆனாலும் அத்தகைய முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை (வழியனுமதியைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பான சான்றுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன).

4. 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை 1 இன் விடயம் 3 இற்கு இணங்க மின்சார மார்கத்தை (ங்களை) நிறுவுவதற்கு / நிறுவி வைத்திருப்பதற்கு நாங்கள் இத்தால் அதிகாரத்தைக் கோருகின்றோம்.

…………………………………………………

உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரது கையொப்பம்

அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ……………………………………

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: ………………………...................................

முகவரி: ………………………………………………………........

திகதி: …………………………… (விண்ணப்பத் திகதி)

(*பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக)

## இணைப்பு IV - வழியனுமதியைப் சுவீகரிப்பதற்கான சிபாரிசு

திகதி: ................................

தலைவர்
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

......................... ஆம் திகதி ........................................................................................ என்பவரினால் (உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரம் அளிக்கப்பட்ட தரப்பு) சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை தங்களுக்குக் குறிப்பீடு செய்கின்றோம்.

உரிமம் பெற்ற தரப்பின் மூலம் மேற்குறித்த விண்ணப்பம் தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணையில் கண்டறிந்தவை பற்றிய சுருக்கமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

...................................................................................................................................

...................................................................................................................................

...................................................................................................................................

...................................................................................................................................

...................................................................................................................................

குறித்த விசாரணையினதும் மேற்குறித்த கண்டறிந்தவைகளின் அடிப்படையில், மேற்குறித்த விண்ணப்பத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட அந்த உரிமம் பெற்ற தரப்பினால் முன்வைக்கப்பட்ட வழியனுமதி சுவீகரிப்பை நான் சிபாரிசு செய்கின்றேன்.

தேவையான தகவல்கள் / ஆவணங்கள்[2] (பின்னிணைப்பின் பிரகாரம்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

...........................................

பிரதேச செயலாளர் - ..............................(நிருவாக மாவட்டம்)

[2] பூரணப்படுத்தப்பட்ட பிண்ணிணைப்பை குறித்த சிபாரிசுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். உரிய விடய இலக்கங்கள் (பின்னிணைப்பின் பிரகாரம்) அனுப்பி வைக்கப்படும் ஆவணங்களின் வலது பக்க மேல் மூலையில் குறிக்கப்படுதல் வேண்டும். பின்னிணைப்பில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் / ஆவணங்கள் அனைத்தும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படாத வரையில் எந்த ஒரு சிபாரிசும் வெற்றியளித்ததாக / முழுமையானதாகக் கருதப்பட மாட்டாது.

## (இணைப்பு IV இற்கான பின்னிணைப்பு - அனுப்பி வைக்கப்பட வேண்டிய தகவல்கள்/ ஆவணங்கள் அடங்கிய பட்டியல்)

1. ஒரு மின்சார மார்க்கத்தை நிறுவுவதற்கான / நிறுவி வைத்திருப்பதற்கான உரிமம் பெற்ற தரப்பின் விண்ணப்பத்தின் மூலப்பிரதி ☐
2. வழியனுமதியைக் கோருகின்ற அறிவித்தலின் பிரதி ☐
3. காணி உரிமையாளருக்கு அறிவித்தல் கிடைத்தமைக்கான சான்று ☐
4. வழியனுமதி அளித்துள்ள காணி உரிமையாளரினால் முன்வைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக உரிமம் பெற்ற தரப்பினர் ஏற்றுக்கொள்ள முடியாதவைகள் (ஏதும் இருப்பின்) ☐
5. மின்சார மார்க்கத்தை அகற்றுமாறு உரிமம் பெற்ற தரப்பைக் கோரி காணி உரிமையாளரிடம் அல்லது இருப்பாட்சியாளரிடம் இருந்து கிடைத்த அறிவித்தலின் பிரதி ☐
6. சட்டபூர்வமான ஒரு இருப்பாட்சியினால் காணி அமையப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் ☐
7. ஒரு குடியிருப்பை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான சட்டங்களின் கீழ் திட்டமிடல் அனுமதி வழங்கப்படவில்லை என்பதற்கான உறுதிப்படுத்தல் ☐
8. வழியனுமதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உரிமம் பெற்ற தரப்பு நியாயமான சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்பதற்கான உறுதிப்படுத்தல் ☐
9. உரிமம் பெற்ற தரப்பின் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு வழியனுமதியைச் சுவீகரிப்பது அவசியம் என்பதற்கான உறுதிப்படுத்தல் ☐
10. விசாரணைக்கான ஒரு வாய்ப்பு காணி உரிமையாளருக்கு வழங்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கான சான்று ☐
11. காணியும் காணி உரிமையாளரும் பற்றிய விபரங்கள்

    (அ) காணி உரிமையாளரின் முழுப் பெயரும் தே.அ அட்டையின் பிரதியும் ☐

    (ஆ) காணியின் சட்டபூர்வ உரித்துடமையை நிரூபிப்பதற்கான ஆவணம் ☐

    (இ) காணியின் வரி மதிப்பு இலக்கம் ☐

    (ஈ) காணியின் முகவரி ☐

    (உ) காணி அமைந்துள்ள கி.உ பிரிவு ☐

    (ஊ)காணியைச் சுவீகரிப்பதில் சட்டமுறைத் தடையேதும் இல்லை மற்றும் காணியின் உரித்துடமை தொடர்பில் பிணக்கு ஏதும் இல்லை என்பதற்கான உறுதிப்படுத்தல் ☐

    தேவையான வழியனுமதி பற்றிய விபரங்கள்:

12. (அ) காணியில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிறுவுகையைக் காட்டும் வரைபடம், தேவையான வழியனுமதியின் அளவு, எல்லைகள், அந்தக் காணியின் மீது, கீழ் அல்லது மேலால் ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கின்ற மின்சாரம் மார்க்கம் (ங்கள்) / மின் பொறித்தொகுதி (கள்), அந்தக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்கள் / நிர்மாணங்கள் என்பன பற்றிய விபரங்கள் ☐

    (ஆ) உத்தேசிக்கப்பட்ட மின்சார மார்க்கம் மற்றும் அண்மித்த பகுதியைச் சுற்றி ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கின்ற ஏனைய மின்சார மார்க்கங்கள் என்பவற்றைக் காட்டுகின்ற முறைமை வரைபடம் ☐

    (இ) குறித்த காணியில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற பணி பற்றிய சுருக்கமான விபரம் ☐

## இணைப்பு V –பிரதேச செயலாளருக்கு மரத்தை வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளை தறித்தல் தொடர்பாக அனுப்ப வேண்டிய அறிவித்தல்

**(அறிவித்தல் - 'T')**

………………………………………………………………………………………............ என்பவருக்கு *(காணியின் இருப்பாட்சியாளரின் பெயர், இருப்பாட்சியாளர் உரிமையாளராக இல்லாத பட்சத்தில் காணி உரிமையாளரின் பெயர்)*

2009 இன் 20 ஆம் இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை 1 இன் 6 ஆம் விடயத்தின் பிரகாரம், கீழ்காணும் முகவரியில் அமைந்துள்ள காணியில் காணப்படுகின்ள மரத்தை (ங்களை) வெட்டிவீழ்த்துவதற்கு அல்லது அதன் கிளைகளை தறித்தல் அல்லது அந்த மரத்தின் வேர்களை வெட்டி நீக்குவதற்குத் தேவைப்படுத்துகின்ற ஒரு அறிவித்தல் இத்தால் விடுக்கப்படுகின்றது.

………………………………………………………………………………………………………………………………………

……………………………………………....

*(காணியின் முகவரி)*

எங்களால் **நிறுவப்பட்டுள்ள / நிறுவப்படுகின்ற / நிறுவப்படவுள்ள* ஒரு மின்சார மார்க்கத்திற்கு / மின் பொறித்தொகுதிக்கு / இரண்டிற்கும்** அண்மையில் **/ காணப்படும்** மேற்குறித்த காணியில் வளர்ந்திருக்கின்ற கீழ் விபரிக்கப்பட்ட மரம்(ங்கள்)

☐ மின்சார மார்க்கத்தின் அல்லது மின் பொறித்தொகுதியின் நிறுவுகைக்கு, பராமரிப்புக்கு அல்லது தொழிற்பாட்டிற்கு தடையாக அல்லது இடையூறாகவுள்ளது

☐ ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்தை பொது மக்களுக்கு விளைவிக்கக்கூடியது

(பொருத்தமானவிடத்து '✓' அடையாளமிடுக) இதை/இவற்றை வெட்டிவீழ்த்துவது, அகற்றுவது அல்லது அதன் வேர்களை மீண்டும் வெட்டி அகற்றுவது அவசியமாகும்.

வெட்டிவீழ்த்தப்பட அலலது கிளைகளை வெட்டி அகற்றப்பட அல்லது வேர்கள் மீண்டும் வெட்டப்பட வேண்டிய மரம் (ங்கள்) பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளை அனுசரித்தமையால் உங்களுக்கு ஏற்பட்ட ஏதாவது நியாயமான செலவுகள் எங்களால் செலுத்தப்படும். இந்த அறிவித்தலில் அடங்கிய தேவைப்பாடுகள் தொடர்பில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனைகள் இருந்தால், தயவுசெய்து கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலருக்கு அது பற்றி இந்த அறிவித்தலில் இருந்து ஏழு (7) வேலை நாட்களுக்குள் அறியப்படுத்துங்கள். கூறப்பட்ட அந்தக் காலப் பகுதியினுள் எமக்கு உங்களிடம் இருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை என்றால், மேற்குறிப்பிட்ட பாதிப்பை தவிர்ப்பதற்கு மேலே விவரிக்கப்பட்ட அந்த மரத்தை (ங்களை) வெட்டிவீழ்த்துவதற்கு, கிளைகளை வெட்டி அகற்றுவதற்கு அல்லது வேர்களை மீண்டும் வெட்டுவதற்கு எங்களுக்கு அதிகாரம் உண்டு.

………………………………………………….

உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ……………………………………

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: ……………………….................................

முகவரி: …………………………………………………..

திகதி: ……../……/…….. *(அறிவித்தல் திகதி)*

## இணைப்பு VI - மரத்தை(ங்களை) வெட்டி வீழ்த்தல் அல்லது அதன் கிளைகளை தறித்தல் தொடர்பான கோரிக்கை

………………………………………………………………………………........... என்பவருக்கு.

*(மரம் வளர்ந்திருக்கின்ற காணி அமைந்துள்ள நிருவாக மாவட்டத்தின் பிரதேச செயலாளர்)*

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை 1 இன் 6 ஆம் விடயத்தின் பிரகாரம், பின்வரும் முகவரியில் அமைந்துள்ள காணியில் காணியில் காணப்படுகின்ற மரத்தை (ங்களை) வெட்டிவீழ்த்துமாறு அல்லது கிளைகளை தறிக்குமாறு அல்லது வேர்களை மீண்டும் வெட்டுமாறு கோருகின்ற ஒரு அறிவித்தல் (கள்) கீழ்காணும் காணி உரிமையாளருக்கு (களுக்கு) விடுக்கப்பட்டது / விடுக்கப்பட்டன.

..........................................................................................................................................

..........................................................................................................................................

காணி உரிமையாளரின் (களின்) பெயர் (கள்), முகவரி (கள்):

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

(4) ..........................................................................................................................

எங்களால் விடுக்கப்பட்ட அறிவித்தலில் (களில்) காணப்படும் தேவைப்பாடுகளை ஆட்சேபித்து மேற்குறித்த காணி உரிமையாளரினால் (களால்) விடுக்கப்பட்ட மறுப்பு அறிவித்தல் (கள்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது / ன.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை 1 இன் விடயம் 6 இற்கு இணங்க, அந்த மரத்தை (களை) வெட்டிவீழ்த்துவதற்கு அல்லது கிளைகளை தறிப்பதற்கு அல்லது வேர்களை மீண்டும் வெட்டுவதற்கு நாம் இத்தால் அதிகாரத்தைக் கோருகின்றோம்.

…………………………………………………

உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ……………………………………

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: ……………………..............................

முகவரி: …………………………………………………...

திகதி: ……./……/…….. *(விண்ணப்பத் திகதி)*

## இணைப்பு VII - ஒரு காணியினுள் அல்லது வளவினுள் உத்தேசிக்கப்பட்ட நுழைவு தொடர்பில் விடுக்கப்படும் அறிவித்தல்

### (அறிவித்தல் - 'T')

……………………………………………………………………………………………… என்பவருக்கு
*(காணியின் இருப்பாட்சியாளரின் பெயர், இருப்பாட்சியாளர் உரிமையாளராக இல்லாத பட்சத்தில் காணி உரிமையாளரின் பெயர்)*

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) அட்டவணை III இன் விடயம் 8 இன் பிரகாரம், இத்தால் கீழ்காணும் முவரியில் அமைந்துள்ள காணியினுள் / வளவினுள் எங்களுடைய அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் மூலம் உத்தேசிக்கப்பட்ட நுழைவு தொடர்பான ஒரு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.
……………………………………………………………………………………………….

………………………………………………………………………………………….............
*(காணியின் / வளவின் முகவரி)*

நுழைய உத்தேசிக்கப்பட்ட திகதி: …../…../……
நுழைய உத்தேசிக்கப்பட்ட நேரம்: … : … மு.ப/பி.ப

மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் தன்மை மற்றும் அளவு என்பன பற்றிய விபரம்:
........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................
........................................................................................................................................
………………………………………………………………………………………….............
*(மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் தன்மை மற்றும் அளவு என்பவற்றை கூடுமான வரையில் முழுமையாகவும் சரியாகவும் குறிப்பிடுங்கள்)*

தங்கியிருக்கும் காலம்: ………..
*(எடுக்க உத்தேசிக்கும் காலத்தைக் குறிப்பிடுக)*
நபர்களின் எண்ணிக்கை: ………

மேற்குறித்த விடயம் தொடர்பில் ஏதாவது விளக்கங்கள் தேவைப்பட்டால் அல்லது உத்தேசிக்கப்பட்ட திகதி மற்றும் / நேரம் என்பன தொடர்பில் ஏதாவது அசௌகரிகம் இருந்தால், தயவுசெய்து கீழே கையொப்பமிடப்பட்டுள்ள அலுவலருடன் தொடர்புகொள்ளுங்கள்.

………………………………………………….
உரிமம் பெற்ற தரப்பின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்: ……………………………………
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: ……………………..............................
முகவரி: …………………………………………………...

திகதி: …../…../……